# *மலரட்டும் புத்தாண்டு*

புத்தாண்டு புலர்கின்றது. மற்றொரு வருடம் ஆரம்பமாகின்றது. ஒவ்வொரு புதிய ஆண்டும் தனக்கே உரிய சவால்களுடன், தனக்கே உரிய அருங்குறிகளுடன், எம்முன் வந்து நிற்கின்றன. எனவே தாவீது அரசரோடு சேர்ந்து நாமும் எம் விசுவாசத்தை அறிக்கையிடலாம்:

"*என் ஆயர் ஆண்டவர். எனக்கென்ன குறைவு? நீண்ட பசும் புல் வெளி கொண்டு சேர்ப்பார். நீர் நிலைகளுக்கெல்லாம் என்னை அழைத்துச் செல்வார். காரிருள் சூழும் பள்ளத்தாக்கில் நான் நடக்க நேர்ந்தாலும் எனக்குப் பயமே இல்லை.*"
வாழ்க்கையில் தடங்கல்கள், எதிர்ப்புக்கள், ஏக்கங்கள், பிரச்சினைகள். ஆனால் மொன்றியால் நகரின் மலைக் கோவிலை உருவாக்கிய சகோதரர் ஆந்திரே கூறியது போல: "*எதைப் பற்றியும் கவலைப் படாதீர்கள். எல்லாம் கடந்து போகும். துணிவுடன் இறைவனை நம்புங்கள். புதுமைகள் உங்கள் வாழ்க்கையில் நடை பெறும்.*"

வள்ளுவர் கூறுகின்றார்:

*தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க் கல்லால்*
*மனக் கவலை மாற்றல் அரிது* (குறள் 7).

தன்னிகரற்ற இறைவனின் திருப் பாதங்களில் அமர்ந்தவரைத் தவிர மற்றவர்களுக்கு மனத்திலிருக்கும் பாரத்தை இறக்கி வைப்பது மிகவும் கடினம். எனவே, இந்த ஆண்டு முழுவதும் எம்மைத் தாங்கிப் பிடிக்க வேண்டிய மதிப்பீடாக இறைவனின் பாதத்தை நாடுவோம்.
எம் பிரச்சினைகளை கடவுள் கையில் ஒப்படைக்கும் அதே நேரம், பிறரின் அச்சங்களையும் எதிர்பார்ப்புகளையும் புரிந்து கொள்ளும் அருட்கொடை எம்முடையதாவதாக. பிறரை மகிழ்விப்பதில் கருத்தாயிருப்போம். பிறரை எம் சொல்லாலோ செயலாலோ புண்படுத்தாத படி கவனம் கொள்வோம். அகம் மலர்ந்து தர்மம் செய்வதை விட முகம் மலர்ந்து இன்சொல் கூறுவதே சிறந்தது என்கிறார் வள்ளுவர்:

"*அகன் அமர்ந்து இதலின் நன்றே முகன் அமர்ந்து*
*இன் சொலன் ஆகப் பெறின்*" (குறள் 92).

திருப்பா 91 கூறுவதை பிறரை நாம் வாழ்த்தும் தாரக மந்திரமாகக் கொள்வோம்: "*அவர் தம் சிறகுகளால் உம்மை அரவணைப்பார். அவர்தம் இறக்கைகளின் கீழ் நீர் புகலிடம் காண்பீர்… தீங்கு உமக்கு நேரிடாது. வாதை உம் கூடாரத்தை நெருங்காது.*"
இறைவன் நல் மனம் கொண்ட உங்கள் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதித்துப் பாதுகாப்பாராக. இந்த ஆண்டு முழுவதும் உங்களைக் கண்ணின் மணியெனப் போற்றுவாராக. அவரது பிரசன்னம் உங்களுக்கு முன்னும் பின்னும் அரணாக அமைவதாக. உலகம் தர முடியாத அமைதியால் கிறிஸ்து உங்கள் உள்ளத்தையும் இல்லத்தையும் நிரப்புவாராக.

திருச்சபையின் பெயரால் புத்தாண்டு இனிய நல் வாழ்த்துக்கள்!

கிறிஸ்துவில் அன்புடன்,

**Rev. Fr. Tiburtius Fernandez. SMA**